## April 7, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கக் கோரும் தீர்மானம் தொடர்பாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மக்களவையில் அளித்த நோட்டீஸை அவைத் தலைவர் ஓம் பிர்லா நிராகரித்தார்.

(i) இதே விவகாரம் தொடர்பாக மாநிலங்களவையில் தனியாக அளிக்கப்பட்ட நோட்டீஸை அதன் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் நிராகரித்து உத்தரவு பிறப்பித்தார்.

(ii) மேற்கு வங்கம் உள்பட பல்வேறு மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு (எஸ்ஐஆர்) பிறகு லட்சக் கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. எஸ்ஐஆர் உள்பட பல்வேறு விவகாரங்களில் மத்திய பாஜக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுவதாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை எதிர்க் கட்சிகள் முன்வைத்து வந்தன.

(iii) இதைத் தொடர்ந்து, அவரைப் பதவி நீக்கக் கோரி தீர்மானம் கொண்டுவர மக்களவையில் 130 எம்.பி.க்களும், மாநிலங்களவையில் 63 எம்.பி.க்களும் கையொப்பமிட்டு கடந்த மார்ச் 12-ஆம் தேதி நாடாளுமன்ற இரு அவைகளிலும் நோட்டீஸ் சமர்ப்பித்தனர்.

(iv) தேர்தல் ஆணையத்தின் சுதந்திரம் மற்றும் அரசியல் சாசன நம்பிக்கையைப் பேண தவறிவிட்டதாகவும், அரசு நிர்வாகத்தின் ஆதிக்கத்தின்கீழ் செயல்படுவதாகவும் ஞானேஷ் குமார் மீது 7 முக்கியக் குற்றச்சாட்டுகளை எதிர்க் கட்சிகள் சுமத்தின. இந்நிலையில், இரு அவைகளிலும் ஞானேஷ் குமாரை பதவி நீக்கக் கோரும் தீர்மானம் தொடர்பான நோட்டீஸ்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக இரு அவைகளும் தனித்தனியே விளக்கமளித்துள்ளன.

(v) மக்களவை விளக்கம்:

- மக்களவைச் செயலர் உத்பால்குமார்சிங் வெளியிட்ட செய்திக் குறிப்பில், ‘தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கக் கோரும் தீர்மான நோட்டீஸை 130 எம்.பி.க்கள் மக்களவைத் தலைவரிடம் சமர்ப்பித்தனர். அந்த நோட்டீஸில் எம்.பி.க்கள் குறிப்பிட்டிருந்த அனைத்து விவகாரங்களும் கவனமாக மதிப்பீடு செய்யப்பட்டது. இதையடுத்து, நீதிபதிகள் (விசாரணை) சட்டம், 1968, பிரிவு 3-இன்கீழ் தனது அதிகாரத்தை பயன்படுத்தி தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி நீக்கம் தொடர்பான நோட்டீஸை அவைத் தலைவர் நிராகரித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(vi) மாநிலங்களவை விளக்கம்:

- மாநிலங்களவைச் செயலர் பிரமோத் சந்திர மோடி வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கக் கோரும் தீர்மானம் தொடர்பாக கடந்த மார்ச் 12-ஆம் தேதி 63 எம்.பி.க்கள் அளித்த நோட்டீஸை நீதிபதிகள் (விசாரணை) சட்டம், 1968-இன் கீழ் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவைத் தலைவர் நிராகரித் தார்' எனத் தெரிவிக்கப்பட்டது.

2. சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில், காவல் ஆய்வாளர் உள்பட 9 பேருக்கு மரண தண்டனை விதித்து, மதுரை மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(i) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தைச் சேர்ந்த வணிகர் ஜெயராஜ் (58), இவரது மகன்

பென்னிக்ஸ் (31). கடந்த 2020-ஆம் ஆண்டு கரோனா பொது முடக்கத்தின்போது, அனுமதித்த நேரத்தை விடக் கூடுதலாக தங்களது கைப்பேசி கடையை திறந்துவைத்திருந்தனர். இதன் காரணமாக, சாத்தான்குளம் போலீஸார் அவர்களை விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் சென்று தாக்கினர். இதில் பலத்த காயமடைந்த இருவரும் உயிரிழந்தனர்.

(ii) காவல் நிலைய மரண வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட காவலர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது, தமிழக வரலாற்றில் இதுவே முதல் முறையாகும். இதை இந்த வழக்கில் முன்னிலையான வழக்குரைஞர்கள் உறுதி செய்தனர். காவலர்களுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்த பிறகு, நீதி பதி முத்துக்குமரன் இருக்கையிலிருந்து எழும் முன்பாக தனது பேனா முனையை மேஜையில் குத்தி உடைத்தார்.

3. இந்தியா- ரஷியா கூட்டுத் தயாரிப்பான பிரம்மோஸ் ஏவுகணையின் உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றிய புகழ்பெற்ற ரஷிய ஏவுகணை விஞ்ஞானி அலெக்சாண்டர் லியோனோவ் (74) காலமானார்.

(i) ரஷியாவின் முன்னணி பாதுகாப்பு நிறுவனமான 'என்பிஓ மாஷ்' நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாகவும் (சிஇஓ), தலைமை வடிவமைப்பாளராகவும் லியோனோவ் பணியாற்றி வந்தார்.

(ii) 'சிர்கான்' ஹைப்பர்சோனிக் ஏவுகணை, 'பி-800 ஓனிக்ஸ் ஆகிய அதிநவீன ஏவுகணைகளை உருவாக்கியதில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு.

(iii) குறிப்பாக, இந்தியாவின் பிரம்மபுத்திரா நதி, ரஷியாவின் மாஸ்கோவா நதி ஆகியவற்றின் பெயர்களை இணைத்து 'பிரம்மோஸ்' எனப் பெயரிடப்பட்ட ஏவுகணை திட்டத்தின் முதுகெலும்பாக லியோனோவ் திகழ்ந்தார். இவரது தொழில்நுட்ப வழிகாட்டுதலில் உருவான பிரம்மோஸ் ஏவுகணைகள், இன்று உலகின் மிகவேகமான சூப்பர்சோனிக் ஏவுகணையாகக் கருதப்படுகிறது.

(iv) இந்திய பாதுகாப்புப் படையில் பிரம்மோஸ் ஏவுகணைகளின் பங்களிப்பு அளப்பரியது. 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின்போது, இந்திய விமானப்படை இந்த ஏவுகணையைப் பயன்படுத்தி பாகிஸ்தானின் முக்கிய விமானப்படைத்தளங்களைச் செயலிழக்கச் செய்தது. 800 கி.மீ. வரை துல்லியமாக இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்ட இந்த ஏவுகணை, தற்போது இந்தியாவின் வான்பாதுகாப்பு அரணாக விளங்கி வருகிறது.

4. ஜெர்மனியில் ராணுவச் சேவையில் ஆள்பலத்தை அதிகரிப்பதற்கான புதிய சட்டத் திருத்தத்தால், அந்நாட்டின் 17 முதல் 45 வயதுக்குள்பட்ட ஆண்கள் 3 மாதங்களுக்கும் மேல் வெளிநாடுகளில் தங்குவதற்கு முன் அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(i) ஐரோப்பிய யூனியனின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடான ஜெர்மனியில், கோடிக்கணக்கான ஆண்களைப் பாதிக்கும் இந்த விதிமுறை அண்மையில் உள்ளூர் நாளிதழ் வெளியிட்ட செய்தி வாயிலாக வெளிச்சத்துக்குவந்து, பெரும்விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

(ii) தற்போது ஜெர்மனியில் ராணுவச் சேவை என்பது தன்னார்வ அடிப்படையிலேயே உள்ளது. இருப்பினும், ரஷியாவுடனான அதிகரித்து வரும் போர்பதற்றம் மற்றும் 'நேட்டோ' அமைப்பின் இலக்குகளை எட்டும் நோக்கில், தனது பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கையை 2035-க்குள் 2.6 லட்சமாக உயர்த்த அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.

(iii) இந்நிலையில், இப்புதிய சட்டத்தால் தேவையற்ற நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுவதாக எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ள. அவசரகாலங்களில் வெளிநாடுகளில்

தங்கியிருப்பவர்கள் குறித்த துல்லியமான தகவல்களைத் தெரிந்திருக்கவே இந்தத் தரவுப் பதிவு முறை அவசியம் என்று ஜெர்மனி பாதுகாப்பு அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

(iv) இதுகுறித்து மேலும் பேசிய பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர், 'தேவையற்ற நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்க்கவும், விலக்கு அளிக்கப்பட வேண்டிய பிரிவினருக்கு உரிய விதிமுறைகளை வகுக்கவும் அமைச்சகம் தற்போது தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது' எனத் தெரிவித்துள்ளார்.

(v) பாதுகாப்புக்காக அமெரிக்காவை மட்டும் சார்ந்து இருக்காமல், சுயபலத்தை விரைவாகப் பெருக்கிக் கொள்ள வேண்டும்' என ஜெர்மனி பிரதமர் ஃப்ரைட் ரிச் மெர்ஸ் ஏற்கெனவே ராணுவத் தளபதிகளிடம் வலியுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

5. அண்டை நாடான வங்கதேசத்தில் தட்டம்மை நோய் பாதிப்பு அதிவேகமாகப் பரவி வரும் நிலையில், சுமார் 10 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகளுக்குத் தடுப்பூசி செலுத்தும் அவசரகால திட்டத்தை அந்நாட்டு அரசு தொடங்கியுள்ளது.

(i) நாடு முழுவதும் 7,500-க்கும் மேற்பட்டோர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 17 உயிரிழப்புகள் அதிகாரபூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், சந்தேகத்துக்குரிய வகையில் மேலும் 113 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

(ii) உலக சுகாதார அமைப்பு, யுனிசெஃப் ஆகிய அமைப்புகளுடன் சேர்ந்து, அதிக பாதிப்புள்ள 18 மாவட்டங்களில் முதல்கட்டமாக இத்தடுப்பூசி முகாம் தொடங்கப்பட்டுள்ளது. இதில் வழக்கமான நோய்த் தடுப்பு முறைகளைத் தவறிய 6 மாதங்கள் முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு முனுரிமை அளிக்கப்படுகிறது.

6. தனியார் துறையைச் சேர்ந்த யெஸ் வங்கியின் புதிய மேலாண் இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக (சிஇஓ) வினய் முரளிதர் டான்ஸே பொறுப்பேற்றுக் கொண்டார்.

(i) கடந்த ஏப். 5-ஆம் தேதியுடன் வங்கியின் முன்னாள் சிஇஓ பிரசாந்த் குமாரின் பதவிக்காலம் முடிவடைந்தது. இதையடுத்து, அந்தப் பொறுப்புக்கு வந்துள்ள வினய் டான்ஸே, அடுத்த 3 ஆண்டுகளுக்கு இப்பதவியில் நீடிப்பார் என்று வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது.

7. ஐக்கிய அரபு அமீரகத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த சர்வதேச முதலீட்டுத் தளமான 'வலுரா ஏ.ஐ.', தனது இந்திய சேவையை அதிகார பூர்வமாகத் தொடங்குவதற்கு முன்னர் 1,000-க்கும் மேற்பட்ட நிதி ஆலோசகர்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டுள்ளது.

(i) இதில் சுயாதீன நிதி ஆலோசகர்கள், பதிவுசெய்யப்பட்ட முதலீட்டு நிபுணர்கள் மற்றும் பட்டயக் கணக்காளர்கள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இதன்மூலம், அடுத்த ஒன்றரை ஆண்டுகளில் சுமார் ரூ.3,000 கோடிக்கும் அதிகமான முதலீடுகளை நிர்வகிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ii) இந்தத் தளத்தின் வழியாக முதலீட்டாளர்கள் உலகம் முழுவதும் உள்ள ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பங்குகள் மற்றும் பத்திரங்களில் முதலீடு செய்ய முடியும். கடந்த நிதியாண்டில் இந்தியர்களின் வெளிநாட்டு முதலீடுகள் 67 சதவீதம் உயர்ந்து, 4,160 கோடி டாலராக அதிகரித்துள்ளது. இச்சூழலில், வலுரா நிறுவனத்தின் வருகை முக்கியத்துவம் பெறுகிறது.

8. இந்திய கால்பந்து அணியின் முன்னாள் வீரரும், 'அஸ்ஸாம் மாநிலத்தின் பீலே' என்று

வர்ணிக்கப்பட்டவருமான கில்பர்ட்சன் சங்மா (70) அண்மையில் காலமானார்.

9. ஜெசிகா பெகுலா - அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை.

10. கிர்ஜிஸ்தானில் நடைபெறும் ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் லலித் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

11. மேற்காசிய பதற்றத்தால் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு உதவுவதற்கான நிதிச் சூழல் இந்தியாவில் உள்ளது என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

(i) மும்பையில் ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையிலான நிதிக் கொள்கைக் குழு வங்கிகளுக்கான வட்டி விகிதம் குறித்து புதன்கிழமை (ஏப்.8) அறிவிக்கவுள்ளது. கடந்த முறை விதித்த வட்டி விகிதத்தில் மாற்றங்கள் இருக்காது என எதிர்பார்க்கப்படும் நிலையில் நிர்மலா சீதாராமன் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து தில்லியில் தேசிய பொது நிதி மற்றும் கொள்கை நிறுவனம் நடத்திய நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று அவர் மேலும் பேசியதாவது:

- முந்தைய ஆண்டைவிட நிகழாண்டில் பொருளாதார ரீதியாக பல்வேறு சவால்கள் எழுந்துள்ளன. மேற்காசிய பதற்றம் பிராந்தியத்தை கடந்து உலகளாவிய எரி சக்தி மற்றும் புதிய உலக நடைமுறைக்கு வழிவகுப்பதற்கான பல அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.
- உலகளவில் பல்வேறு நாடுகளின் பொருளாதாரம் அசாதாரண சூழலை எதிர்கொண்டு வருகிறது. பொதுக்கடன் பன்மடங்கு அதிகரித்துள்ளது.
- ஆனால் இந்தியாவில்கடன்- மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) விகிதம் 81 சதவீதமாக உள்ளது. ஜெர்மனிக்கு அடுத்த படியாக பெரும் பொருளாதார நாடுகளை ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவான கடன்-ஜிடிபி விகிதமாகும்.

(ii) 2030-இல் கடன்-ஜிடிபி விகிதம் 50 சதவீதம்:

- 2030-இல் சீனா, அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளின் கடன்-ஜிடிபி விகிதம் மேலும் மோசமடைய வாய்ப்புள்ளதாக கணித்துள்ள சர்வதேச நிதியம், இந்தியாவில் மட்டும் இது 75.8 சதவீதமாக குறையும் எனத் தெரிவித்துள்ளது.
- மத்திய அரசின் சீரிய முயற்சிகளால் நிதிப் பற்றாக்குறை 4.4 சதவீதமாக குறைக் கப்பட்டுள்ளது.
- 2030-31-க்குள் கடன்-ஜிடிபி விகிதத்தை 50 சதவீதமாக குறைக்கவும் பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- நிதி மேலாண்மையை சிறப்பாக கையாளாததால் பல நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகிறது. நமது நாட்டில் மேற்காசிய பதற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள துறைகளுக்கு உதவுவதற்கான நிதிச்சூழல் உள்ளது.

(iii) விலையேற்றம் தடுப்பு:

- மூலதன முதலீட்டு மேலாண்மை, ரிசர்வ் வங்கி மூலம் வட்டி விகிதங்கள் குறைப்பு என பாதிக்கப்பட்ட துறைகளுக்கு மத்திய அரசால் ஆதரவளிக்க முடியும்.
- பெட்ரோல் மற்றும் டீசல் மீது விதிக்கப்படும் கலால் வரிகள் குறைப்பு, பெட்ரோ கெமிக்கல் பொருள்களுக்கான கலால் வரிக்கு விலக்கு என மேற்காசிய பதற்றத்தால் ஏற்படும் விலையேற்றம் சாமானியர்களை பாதிக்காதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதே இதற்கு உதாரணம் என்றார்.

12. ஆளில்லா சிறிய ரக விமானங்களுக்கான (ட்ரோன்) தொழில்நுட்ப வழிமுறைகளைக்

கொண்ட 50 பக்க அறிக்கையை இந்திய ராணுவம் வெளியிட்டது.

- ரஷியா-உக்ரைன் போர், மேற்காசிய மோதல் என உலகம் முழுவதும் போர் முறைகளில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வரும் நிலையில் ஆளில்லா விமான அமைப்புகளின் முக்கியத்துவம், தொழில்நுட்ப மேம்பாடு குறித்து அந்த அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்டது.
- மேலும் கண்காணிப்பு, வெடி மருந்துகள், வான் பாதுகாப்பில் ஆளில்லா விமான அமைப்பின் பங்கு, சிறப்பு பணிகள், தளவாடங்கள் ஆளில்லா விமான அமைப்பு ஆகிய 5 பகுதிகளின் கீழ் 30 வகையான சிறிய ரக விமான அமைப்புகள் குறித்த தகவல்கள் அதில் இடம் பெற்றுள்ளன.
- தில்லியில் நடைபெற்ற ஆளில்லா சிறிய ரக விமான அமைப்புகள் மற்றும் வெடிமருந்துகளுக்கான இந்திய ராணுவத்தின் வழிமுறைகள் என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிடும் நிகழ்ச்சியில் இந்திய ராணுவத்தின் துணைத் தலைவர் (திறன் மேம்பாடு மற்றும் நிலைத்தன்மை) ராகுல் ஆர்சிங், ராணுவ வடிவமைப்பு முகமையின் கூடுதல் தலைமை இயக்குநர் சி.எஸ்.மான் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர். நிகழ்வில் இந்திய ட்ரோன் கூட்டமைப்பு, இந்திய பாதுகாப்பு உற்பத்தியாளர்கள் சங்கம், இந்திய தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனங்களின் கூட்டமைப்பு உள்ளிட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

13.விறகுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மரக் கட்டைகள் ஏற்றுமதிக்கு மத்திய அரசு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

(i) முன்னதாக மரப் பொருள்கள் ஏற்றுமதிக்கு எந்தக் கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. இந்நிலையில், மேற்காசியபோர் காரணமாக சமையல் எரிவாயு (எல்பிஜி) கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டதைத் தொடர்ந்து, பல உணவகங்கள் விறகைப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது.

(ii) இந்தச் சூழலில், விறகுக்கு மாற்றாகப் பயன்படும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மரக் கட்டைகளின் ஏற்றுமதிக்கு மத்திய அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது. அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு அரசிடம் இருந்து அனுமதி அல்லது உரிமம் பெற வேண் டும்.

(iii) ஏற்றுமதிக்கு அதேவேளையில் மரத்தூள், மரக்கட்டைகள் மற்றும் மரத் துண்டுகளின் விதிக்கப்பட்ட தடையை மத்திய அரசு தளர்த்தியுள்ளது. வரையறை கொண்ட அங்கீகாரத்தின் கீழ் மட்டுமே, அவற்றை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படும் என்று மத்திய வர்த்தக அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வெளிநாட்டு வர்த்தக தலைமை இயக்குநரக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14. காவல் நிலையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் (சிசிடிவி) பொருத்தும் திட்டம் தொடர்பாக மத்திய உள்துறைச் செயலர் செவ்வாய்க்கிழமை (ஏப். 7) நேரில் ஆஜராக உச்சநீ திமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(i) நாட்டில் உள்ள காவல் நிலையங்களில் சிசிடிவி கேமராக்கள் போதிய அளவில் இல்லாதது மற்றும் முறையாக செயல்படாதது குறித்து உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரித்து வருகிறது. இந்த வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் விக்ரம்நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது.

(ii) அப்போது பல்வேறு இடங்களில் பொருத்தப்பட்ட சீன நிறுவனத்தின் சிசிடிவி கேமராக்களை தேச பாதுகாப்பு கருதி அகற்ற வேண்டும் என்று மத்திய அரசு

அறிவுறுத்தியுள்ளதாக ஊடகத்தில் வெளியான தகவல் குறித்து நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

(iii) இதற்கு மத்திய அரசுத் தரப்பில் ஆஜராகி பதிலளித்த கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ராஜா தாக்கரே, 'சிசிடிவி கேமராக்களை அகற்ற முறைப்படி எந்த உத்தரவையும் மத்திய அரசு பிறப்பிக்க வில்லை' என்று தெரிவித்தார்.

(iv) இந்த வழக்கில் உச்சநீதிமன்றத்துக்கு உதவநிய மிக்கப்பட்ட மூத்த வழக்குரைஞர் சித்தார்தா தவே கூறுகையில், 'பெரும்பாலான மாநிலங்களின் காவல் நிலையங்களில் சிசிடிவி பொருத்தப்பட்டுள்ளன. இதில் கேரளம் சிறப்பாக செயல்பட்டுள்ளது' என்று தெரிவித்தார்.

(v) இதைக் கேட்ட நீதிபதிகள் அமர்வு மத்திய உள் துறைச் செயலர் உச்சநீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டது.

15. காவல் சித்திரவதை மற்றும் சாத்தான்குளம் வழக்கு :-

(i) வரலாற்று மற்றும் புள்ளிவிவர எதார்த்தம் (2010–2021)

- சட்டமியற்றல் தோல்வி (2010): சித்திரவதையைத் தடுப்பதற்கான ஒரு மசோதா 2010-ஆம் ஆண்டில் மக்களவையில் நிறைவேற்றப்பட்டது; ஆனால், மாநிலங்களவையில் அது விவாதிக்கப்படாமலே போனதால், அம்மசோதா காலாவதியாகிவிட்டது.
- 2021-ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள், 2016-17 மற்றும் 2020-21 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், காவல் காவலில் (police custody) 11,419 மரணங்கள் நிகழ்ந்துள்ளதை வெளிப்படுத்தின; இது இந்தியா முழுவதும் தினமும் சராசரியாக ஐந்து மரணங்கள் என்ற விகிதத்தில் நிகழ்ந்ததாகும்.
- இந்தியச் சட்ட ஆணையம் 2017-ஆம் ஆண்டில் சித்திரவதையைத் தடுப்பதற்கான ஒரு வரைவு மசோதாவைத் தயாரித்தது; ஆனால், அது சட்ட அமைச்சகத்தில் இன்னும் நிலுவையிலேயே உள்ளது.
- இந்தியா 1997-ஆம் ஆண்டில் ஐ.நா.வின் 'சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கையில்' (UN Convention against Torture) இணைந்திருந்தபோதிலும், அதனை முழுமையாகச் செயல்படுத்தத் தேவையான உள்நாட்டுச் சட்டத்தை அது இதுவரை இயற்றவில்லை.

(ii) சாத்தான்குளம் வழக்கு (ஜூன் 2020)

- சம்பவம்: கோவிட்-19 ஊரடங்கு காலத்தில் அனுமதிக்கப்பட்ட நேரத்திற்குப் பிறகும் தங்கள் அலைபேசி கடையைத் திறந்து வைத்திருந்ததற்காக, ஜெயராஜ் (58) மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் (31) ஆகியோர் சாத்தான்குளம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.
- காவல் வன்முறை: தந்தை மற்றும் மகன் ஆகிய இருவரும் காவல் நிலையத்திற்குள் இரவு முழுவதும் கடுமையான உடல் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர்; இதன் விளைவாக, அவர்கள் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்ட சிறிது நேரத்திலேயே உயிரிழந்தனர்.
- குற்றம் சாட்டப்பட்ட காவலர்கள்: தொடக்கத்தில், ஆய்வாளர் ஸ்ரீதர் மற்றும் உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ் உள்ளிட்ட 10 காவல்துறை அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர்.

(iii) நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் தண்டனை அறிவிப்பு (மார்ச்–ஏப்ரல் 2026)

- குற்ற நிரூபணம் (மார்ச் 23, 2026): ஒன்பது காவல்துறை அதிகாரிகள் இந்த இரட்டைக்கொலை வழக்கில் குற்றவாளிகள் என்று மதுரை முதல் கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- மரண தண்டனை (ஏப்ரல் 6, 2026): தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக, காவல் காவலில் வைத்து கொலை செய்த குற்றத்திற்காக, குற்றம் நிரூபிக்கப்பட்ட அந்த ஒன்பது காவல்துறை அதிகாரிகளுக்கும் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.
- நீதிபதி முத்துக்குமரன் இவ்வழக்கை "அரிதினும் அரிதான வழக்கு" (rarest of rare) என்று வர்ணித்தார்; பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை கொண்ட காவல்துறையினரே, "வேலியே பயிரை மேய்வது" போலச் செயல்பட்டுவிட்டதாக அவர் குறிப்பிட்டார்.
- குற்றம் நிரூபிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு நீதிமன்றம் ₹1.40 கோடி அபராதம் விதித்தது; இவ்வபராதத் தொகை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட வேண்டும். அபராதம் செலுத்தப்படாவிடில், அந்த அதிகாரிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யுமாறு அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

(iv) தொடரும் வன்முறைப் போக்குகள் (2023–2025)

- அம்பாசமுத்திரம் (2023): விசாரணைக்காகக் காவல் நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்ட நபர்களின் பற்களை, இடுக்கி (pliers) கொண்டு பிடுங்கியதாக ஓர் ASP அதிகாரி மீது குற்றம் சாட்டப்பட்டது.
- சிவகங்கை (ஜூன் 2025): திருட்டுப் புகாரின் பேரில் கைது செய்யப்பட்ட 29 வயதான அஜித் குமார் என்ற இளைஞர், காவல் காவலில் இருந்தபோது உயிரிழந்தார்; அவர் மீதான திருட்டுப் புகார்கள் பின்னர் பொய்யென நிரூபிக்கப்பட்டன.

(v) அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் கட்டமைப்பு சார்ந்த உத்தரவுகள்

- CCTV பொருத்துதல்: காவல் நிலையங்களில் அதிகாரிகளின் செயல்பாடுகளைக் கண்காணிக்க, அனைத்துக் காவல் நிலையங்களிலும் CCTV கேமராக்களைப் பொருத்துமாறு உச்ச நீதிமன்றம் முன்னரே உத்தரவிட்டிருந்தது.
- அண்மையக் கண்காணிப்பு (ஏப்ரல் 2026): ஏப்ரல் 7, 2026 அன்று, பல காவல் நிலையங்களில் CCTV கேமராக்கள் காணாமலோ அல்லது செயல்படாமலோ இருப்பது ஏன் என்பதை விளக்குவதற்காக, மத்திய உள்துறைச் செயலாளர் நேரில் ஆஜராகுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
- நீதித்துறை மேற்பார்வை: சாத்தான்குளம் வழக்கு, சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையால் நேரடியாகக் கண்காணிக்கப்பட்டது; இதன் மூலம், பாதிக்கப்பட்டவர்களுடன் சேர்த்து இவ்வழக்கும் "மூடிமறைக்கப்பட்டுவிடாமல்" இருப்பதை நீதிமன்றம் உறுதி செய்தது.

(vi) நிறுவன ரீதியான குறைபாடுகளின் பகுப்பாய்வு

- "மௌனமான" பாதுகாப்பு அரண்கள்: பாதிக்கப்பட்டவர்கள் சிறைக்கு அனுப்பப்படுவதற்கு முன்பு, அவர்கள் உடலில் தென்பட்ட காயங்களைப் பதிவு செய்ய வேண்டிய தங்கள் கடமையை, நீதித்துறை நடுவரும் மருத்துவ அதிகாரியும் நிறைவேற்றத் தவறினர்.
- வரையறையின்மை: இந்தியத் தண்டனைச் சட்டத்தின் (IPC) பிரிவுகள் 330 மற்றும் 331 ஆகியவை, "குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெறுவதற்காகத் தானாக முன்வந்து காயம் ஏற்படுத்துவது" பற்றி மட்டுமே பேசுகின்றன; ஆனால், "சித்திரவதை" என்பதை ஒரு தனித்த குற்றமாக வரையறுக்கும் பரந்த சட்ட விளக்கத்தை அவை வழங்குவதில்லை.

- “காவல் நிலைய" கலாச்சாரம்: சித்திரவதைக்கு எதிரான ஒரு குறிப்பிட்ட சட்டத்தின் கீழ், காவல் அதிகாரிகள் தனிப்பட்ட சட்டப் பொறுப்புக்கு உட்படுத்தப்படாத வரை, காவல் காவலில் இருப்பவர்களை நடத்தும் முறை குறித்து உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள வழிகாட்டுதல்களை அவர்கள் தொடர்ந்து புறக்கணித்தே வருவார்கள்.

16. தமிழ்நாட்டில் வாக்குரிமையின் வரலாற்றுப் பரிணாமமும் தற்போதைய அரசியல் சூழலும்.

(i) வாக்குரிமையின் வரலாற்றுப் பரிணாமம்

- பண்டைய வேர்கள்: தமிழ்நாட்டில் வாக்குரிமையின் தோற்றத்தை, பண்டைய காலத்தில் நடைமுறையில் இருந்த "குடவோலை" முறை வரை பின்னோக்கிச் சென்று அறியலாம்.
- மாண்டேகு-செம்ஸ்ஃபோர்ட் பரிந்துரைகளைத் தொடர்ந்து, இந்தியாவில் நேரடித் தேர்தல்கள் முதன்முதலில் 1920-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன.
- அக்காலத்தில், வாக்களிக்கும் உரிமை என்பது செல்வந்தர்களுக்கும் சொத்து உரிமையாளர்களுக்கும் மட்டுமே ஒதுக்கப்பட்ட ஒரு சிறப்புரிமையாக இருந்தது; பெண்கள் தொடக்கத்தில் வாக்களிப்பதிலிருந்தும், தேர்தலில் போட்டியிடுவதிலிருந்தும் விலக்கி வைக்கப்பட்டிருந்தனர்.
- வி.எம். தர்குண்டே குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், வாக்களிப்பதற்கான வயது வரம்பு 21-லிருந்து 18-ஆகக் குறைக்கப்பட்டது. இது 1988-ஆம் ஆண்டின் 61-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது; இச்சட்டம் அதிகாரப்பூர்வமாக 1989-ஆம் ஆண்டு மார்ச் 28-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது.

(ii) வாக்களிக்கும் வயது வரம்பு குறித்த உலகளாவிய ஒப்பீடு :-

- 16 ஆண்டுகள்: அர்ஜென்டினா, கியூபா மற்றும் ஈக்வடார்.
- 17 ஆண்டுகள்: கிழக்குத் திமோர், கிரீஸ் மற்றும் இந்தோனேசியா.
- 20 ஆண்டுகள்: தைவான்.
- 21 ஆண்டுகள்: லெபனான், குவைத் மற்றும் ஓமன்.
- 25 ஆண்டுகள்: ஐக்கிய அரபு அமீரகம் (UAE) உலகிலேயே மிக உயர்ந்த வாக்களிக்கும் வயது வரம்பைக் கொண்டுள்ளது.

(iii) 2026 தமிழ்நாடு தேர்தல்களில் "இளைஞர்களின் சக்தி"

- தமிழ்நாட்டில் சுமார் 1.18 கோடி வாக்காளர்கள் 30 வயதுக்கு உட்பட்டவர்களாக உள்ளனர்.
- முதல்முறை வாக்காளர்கள்: 18 முதல் 19 வயதுக்குட்பட்ட பிரிவில் 12,51,742 வாக்காளர்கள் உள்ளனர்.
- இளம் வாக்காளர்கள் (18 முதல் 29 வயது வரை) மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் 21 சதவீதத்தை வகிக்கின்றனர்; அதாவது, ஒவ்வொரு ஐந்து வாக்காளர்களிலும் ஒருவர் ஒரு இளைஞர் ஆவார்.
- வாக்காளர் பட்டியலின் துல்லியத்தை உறுதி செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சிறப்புத் தீவிரத் திருத்தப் பணிக்குப் பிறகு, சுமார் 73 லட்சம் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன.

(iv) 2026 தேர்தல் ஏற்பாடுகள் மற்றும் வேட்புமனுத் தாக்கல்

- தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் பணி,

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் 6-ஆம் தேதி திங்கட்கிழமையன்று நிறைவடைந்தது.

- மாநிலம் முழுவதும் 7,000-க்கும் மேற்பட்ட வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.
- கரூர் தொகுதி அதிகபட்சமாக 108 வேட்பாளர்களுடன் அதிக எண்ணிக்கையிலான வேட்புமனுக்களைப் பதிவு செய்தது; இதைத் தொடர்ந்து தொண்டாமுத்தூர் (77) மற்றும் பெரம்பூர் (66) ஆகிய தொகுதிகள் இடம்பெற்றன.
- வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை ஏப்ரல் 7-ஆம் தேதிக்குத் திட்டமிடப்பட்டுள்ளது; வேட்புமனுக்களைத் திரும்பப் பெறும் கால அவகாசம் முடிந்த பிறகு, வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் ஏப்ரல் 9-ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது.

(v) அரசியல் உத்திகள் மற்றும் போக்குகள்

- "ஒரே பெயர்" குழப்பம்: பிரபலமான அரசியல் தலைவர்களின் பெயரையே கொண்ட சுயேச்சை வேட்பாளர்களைத் தேர்தலில் நிறுத்தி, வாக்காளர்களைக் குழப்புவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பொதுவான தேர்தல் உத்தி இதுவாகும்.
- தற்போதைய உதாரணம்: பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்குத் தொகுதிகளில், நடிகர்-அரசியல்வாதியான விஜயின் செல்வாக்கை எதிர்கொள்ளும் வகையில், "விஜய்" அல்லது "ஜோசப்" என்ற பெயருடைய பல வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.
- பாதுகாப்பு நடவடிக்கை: இத்தகைய குழப்பத்தைத் தவிர்க்கும் பொருட்டு, தேர்தல் ஆணையம் தற்போது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் (EVMs) வேட்பாளர்களின் புகைப்படங்களையும் இடம்பெறச் செய்துள்ளது.
- "ஒரே நாடு, ஒரே தேர்தல்": 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மற்றும் 'பொது சிவில் சட்டம்' ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் அரசு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டு வருவதாகவும், 2029-ஆம் ஆண்டை இதற்கான சாத்தியமான இலக்காகக் கொண்டுள்ளதாகவும் பிரதமர் மோடி சுட்டிக்காட்டினார்.
- அரசியலில் இளைஞர்கள்: அரசியல் கட்சிகள் தங்கள் "தோல்வி குறித்த அச்சத்தை"க் களைந்து, அனுபவம் வாய்ந்த மூத்த அரசியல்வாதிகளைத் திரும்பத் திரும்பத் தேர்தலில் நிறுத்துவதற்குப் பதிலாக, புதிய முகங்களுக்கும் இளைஞர்களுக்கும் தேர்தலில் போட்டியிட அதிக வாய்ப்புகளை வழங்க வேண்டும்